செ.வெ.எண்: 465 நாள்: 28/07/2020.

**விவசாயிகள் பயிர் காப்பீடு செய்திட தஞ்சாவூர் மாவட்டத்தில் பொது சேவை மையங்கள் 31.07.2020 வரை முழு நேரம் இயங்கிட சிறப்பு அனுமதி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அனுமதி**

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் ஜுன் 12 ந் தேதி திறந்து விட்ட நிலையில், விவசாயிகள் அனைவரும் குறுவை சாகுபடி பணிகளை மும்மரமாக மேற்கொண்டு வருகின்றனர். விவசாயிகள் குறுவை நடவு பணி முடிந்தவுடன் அதற்கான அடங்கல் பெற்று தற்சமயம் சாகுபடி செய்துள்ள பயிரினை காப்பீடு செய்யும் பணியினை மேற்கொண்டு வருகின்றனர்.

**கொரோனா முன்னேற்பாடு தடுப்பு நடவடிக்கைக்காக வணிக மையங்கள் இயங்குவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில், அக்கட்டுப்பாட்டினை தளர்த்தி விவசாயிகளின் நலன் கருதி நெல் குறுவை காப்பீடு செய்திட கடைசி நாளான 31.07.2020 வரை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொது சேவை மையங்களும் 24 மணி நேரமும் இயங்கலாம் என சிறப்பு அனுமதி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ம.கோவிந்தராவ், இ.ஆ.ப.,அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.**

பொது சேவை மைய நிர்வாகிகள், கோவிட் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தையும் பின்பற்றி, தங்களது நிறுவனத்தினை 24 மணி நேரமும் திறந்து வைத்து, விவசாயிகளிடமிருந்து பயிர் காப்பீட்டு விண்ணப்பத்தினை பெற்று அவர்கள் காப்பீடு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி, முகக்கவசம் அணிந்தும், சமூக இடைவெளியினை பின்பற்றியும் தங்கள் அருகாமையில் உள்ள பொது சேவை மையங்களை அணுகி தாங்கள் சாகுபடி செய்துள்ள குறுவை நெற்பயிர்களை 31.07.2020 க்குள் காப்பீடு செய்து பயனடையுமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு.ம.கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்.

வேளாண்மை இணை இயக்குநர்
தஞ்சாவூர்.

28/7/20